பள்ளிக் கல்வி (ப.க.4(2))த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 9.

கடித எண்.9658/ப.க.4(2)//2016– நாள் 09 .05.2016

அனுப்புநர்
திருமதி. த.சபிதா. இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–79
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15

அய்யா,

பொருள்: பள்ளிக் கல்வி – முதன்மைக் கல்வி அலுவலகம் – ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் 478 தற்காலிக பணியிடங்கள் ஏப்ரல் 2016 மாதத்திற்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: 1, அரசாணை (1டி) எண்.58 பள்ளிக்கல்வி (ஆர்.1) துறை, நாள் 11.03.2013.

2,பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.001242/எல்/இ3/2016, நாள் 04.04.2016.

-----

பார்வையில் காணும் கடிதத்தின் மீது தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. பள்ளிக் கல்வித் துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் பணிபுரியும் 478 அலுவலர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் கொடி (அ) வில் உள்ள பல்வேறு அரசாணைகளின்படி, தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டது. இப்பணியிடங்களுக்கு பார்வை 1ல் காணும் அரசாணையின்படி 01.01.2013 முதல் 31.12.2015 முடிய தொடர் நீடிப்பு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

3. இந்நிலையில், பள்ளிக் கல்வித் துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் பணிபுரியும் 478 அலுவலர் மற்றும் ஆசிரியரல்லாத தற்காலிக பணியிடங்களுக்கு 01.01.2016

முதல் ஐந்து ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு கருத்துரு ஆய்வில் உள்ளதால் அப்பணியிடங்களுக்கு ஏப்ரல் 2016 முதல் மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்கிட அதிகார ஆணை வழங்கிட பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கோப்பு அரசின் ஆய்வில் உள்ளதால் பள்ளிக் கல்வித் துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் பணிபுரியும் 478 அலுவலர் மற்றும் ஆசிரியரல்லாத தற்காலிக பணியிடங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியம் உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும். ஏப்ரல் 2016 மாதத்திற்கு சம்பளப் படிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் பெற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.28368.Edu,II.2016 Dated 09.05.2016 ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.

நிதி (கல்வி–II)த் துறை, சென்னை–9.